# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 115/2025 | Date | : 19.02.2026 |
| Deposition of Witness for | : அ.சா.4 | Taluk | : |
| Name | : திரு. தேவராஜ் | Calling | : |
| Father / Husband Name | : சித்துராஜ் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.02.2026.

(எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள். )

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1. நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, இடங்கணசாலை, நல்லணம்பட்டி கிராமத்தில் வசித்து தறி தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். கடந்த 1 வருடத்திற்கு முன்பாக மதியம் சுமார் 03.00 மணியளவில் நான் பெரியாண்டிச்சி கோவில் அருகே இருந்த போது அங்கு கூட்டமாக இருந்தது. என்ன நடந்தது என்பது எனக்கு தெரியாது. ரங்கநாதன் கீழே விழுந்து விட்டதாக கேள்விபட்டேன். இவ்வழக்கை பற்றி வேறு ஏதும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 31.10.2024ம் தேதி பகல் 3.00 மணியளவில் அ.சா.1 னிடம்

ஆஜர் எதிரிகள் அனைவரும் பெரியாண்டிச்சியம்மன் கோவில் அருகே வந்து கெட்ட வார்த்தையால் பேசியதாகவும், கட்டையால் ரங்கநாதனின் தலையில் அடித்தும், கையால் இடது தோள்பட்டையில் குத்தியதையும் நேரில் பார்த்ததாக போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

<u>**மறுவிசாரணை:–**</u> இல்லை.

Witness- Sd/- Devaraj

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D.Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C. 115/2025 | Date | : 19.02.2026 |
| Deposition of Witness for | : **அ.சா.5** | Taluk | : |
| Name | : **திரு. ராஜா** | Calling | : |
| Father / Husband Name | : **திரு. மாதையன்** | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 19.02.2026.

**(எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்)**

<u>முதல் விசாரணை :</u>

1. நான் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இடங்கணசாலை நல்லணம்பட்டி மாங்காடு மலையடிவாரத்தில் வசித்து தறி தொழில் செய்து வருகிறேன். கடந்த 1 வருடத்திற்கு முன்பாக மாலை 5.00 மணியளவில் நல்லணம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் இருந்தபோது போலிசார் என்னிடம் ஒரு கையெழுத்து வாங்கி கொண்டார். எதற்கு என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதிக்கப்பட்டதின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 1.11.2024 ம் தேதி மாலை 4.30 மணியளவில் நல்லணம்பட்டி மாரியம்மன் கோவில் அருகில் ரங்கநாதன் என்பவருக்கு நடந்த சம்பவம் தொடர்பாக மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்த போது, உடனிருந்து கையொப்பம் செய்து விட்டு தற்சமயம் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கபட்டது.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை.

Witness- Sd/- Raja

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/- D.Sivakumar,
Judicial Magistrate No.II,
Sankari.